'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVI பிப்ரவரி கி.பி. 2025 சான்று : 182



## நலம் நல்கும் எதிர்நோக்கு






அகில இந்திய விவிலிய மாநாடு - வேளாங்கன்னி



அறிமுகப் பயிற்சி - திருமயம்

## புதிய பணியாளர்கள் பயிற்சி



ஓரியூர்



தங்கச்சிமடம்



காளையார்கோவில்

# உங்கள் சகோதரனிடமிருந்து

பாசத்திற்குரிய நற்செய்திப் பணி குடும்பமே

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத் 28:19) என்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் முதன்மையான, முக்கியமான, தலையாய, திரு அவையின் உள்ளுயிராய் விளங்குகிற, இறுதியான, உறுதியான கட்டளைப்படி நானும் நீங்களும் வாழ வாழ்த்துகிறேன் விவிலியத்தின் குறிப்பேட்டு நூலில் ஒரு நிகழ்வை வாசிக்கிறோம். யாகசியேல் என்பவர் மீது தூய ஆவியானவர் இறங்கி' மக்களைப் பார்த்து 'நீங்கள் போங்கள்', நீங்கள் போரிட வேண்டியது இல்லை அணிவகுத்து நின்றாலே போதும். உங்கள் சார்பாக ஆண்டவர் கொள்ளும் வெற்றியை காண்பீர்கள். உங்களுக்கு முன்பாக இருக்கும் விடுதலை பணி பற்றிய எந்த குழப்பமும் வேண்டாம். அஞ்சவும் வேண்டாம். நிலைகுலையவும் வேண்டாம் என்று கூறுகிறார் (2 குறி 20:15-17)

நாம் களப்பணிக்கு, விடுதலைப் பணிக்கு செல்ல வேண்டியது தான் நம் வேலை .அங்கே விடுதலை கொடுப்பவர் கடவுளே. எனவே முதன்மையான (மத் 28:19) கட்டளையில் முதல் பகுதியாகிய 'போ' என்ற கட்டளைக்கு கீழ்படிந்து களப்பணிக்கு செல்வோம் .எப்படி போக வேண்டும் என்பதன் பல்வேறு பரிணாமங்களை தியானிப்போம்.

1. கீழ்ப்படிந்து போவோம்: நாம் செல்ல வேண்டிய பகுதி, நாள் அறிவிக்கப்பட்டவுடன் (1தெச2:13) அதை கடவுளின் அழைப்பாக ஏற்றுக்கொண்டு பணிக்கு புறப்பட்டுச் செல்ல வேண்டும். திருத்தூதர் பணி நூலிலே 'போனார்கள்' என்ற பொருளில் 'சென்றார்கள்' என்று பல முறை ,அதாவது அறிவிக்க சென்றார்கள் என்ற வார்த்தை ,நம்மையும் 'போ' என்ற கட்டளைக்கு செவிமடுக்க அழைக்கிறது. இந்த உலகத்தில் நாம் யாரிடமாவது வேலை பார்ப்போம் அல்லது வேலை வாங்குவோம் .அதில் நமக்கு ஊதியம் கொடுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்வதை கேட்காமல் இருக்க முடியுமா? அப்படி இருக்க விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் கொண்ட (மத் 28:18) கடவுளுக்கு கீழ்ப்படியாமல் இருக்க முடியுமா? 'போ' என்கிறார். உடனே கீழ்ப்படிந்து களப்பணிக்கு போவோம்.

2. இறை வேண்டுலுடன் போவோம்: இறை வேண்டலின்றி செல்வது, போரிட செல்லும்போது எந்த ஆயுதமும் இல்லாமல் செல்வதற்கு சமம். என்னை விட்டு பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது (யோவா15:5) என்று ஆண்டவர் இயேசு தெளிவாக கூறியிருக்கிறார். அவரோடு இணைந்திருப்பதுதானே இறைவேண்டல்.நம் குழு, நாம் செல்கிற இடம், அங்கு வாழ்கிற மக்கள் அனைவரையும், அனைத்தையும் கடவுள் கரங்களில் ஒப்புக்கொடுத்து இறைவேண்டல் செய்து செல்ல வேண்டும். இறை வேண்டலின்றி விடுதலைப் பணியில் வெற்றி இல்லை.

3. அன்பால் நிறைந்து போவோம்: கடவுள் நம்மை அன்பு செய்கிறார் (யோவா 3:16,லூக் 2:10,11,உரோ8:32). இவ்வுலகில் உள்ள அனைவரையும் அன்பு செய்கிறார் (எரே 31:3,1யோவா4:8,சாஞா 11:24). நாமும் பிறரை அன்பு செய்ய கட்டளையிட்டிருக்கிறார் (மாற் 12:31). உலகம் உணவுக்காக ஏங்குவதை விட அன்புக்காக அதிகம் ஏங்குகிறது என்று அன்னை தெரசா கூறியுள்ளார். அன்புள்ள இடத்தில் தான் ஆண்டவர் இருக்கிறார் என்கிறார் காந்தி அடிகள். நல்லது செய்பவன் கோயில் நுழைவாயில் வரை வருகிறான். அன்பு செலுத்துபவனோ இறைவனை அடைகிறான் என்கிறார் ரவீந்திரநாத் தாகூர். அன்பு தான் உன் பலவீனம் என்றால் உலகில் நீதான் பலசாலி என்கிறார் அன்னை தெரசா. நம் மீது பொழியப்பட்டிருக்கிற(உரோ 5:5-8) அன்பைக் கொண்டு பணிக்குப் போவோம்.

4. இருவர் இருவராகப் போவோம்: ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் சீடர்களை களப்பணிக்கு அனுப்பும்போது இருவர் இருவராகத் தானே அனுப்பினார்(லூக் 10:1) ஒருவர் செபிக்க, ஒருவர் உரையாட வேண்டுமே?. ஒருவர் பேசும்போது மற்றொருவர் அமைதி காத்து செபித்தால் அதிசயமூட்டும் விடுதலையை அங்கே காணலாமே?. நீங்கள் வேகமாகச் செல்ல விரும்புவீர்கள் என்றால் தனியே செல்லுங்கள். நீங்கள் வெகு தூரம் செல்ல வேண்டுமென்றால்இருவர் இருவராகச் செல்லுங்கள் என்கிறது ஒரு ஆப்பிரிக்க பழமொழி. இணைந்து செயலாற்றுவதை பற்றி புனித பவுல் தன் கடிதங்களில் பல முறை பதிவு செய்திருக்கிறார்.எனவே இருவர் இருவராகப்போவோம்.

5. தகுந்த தயாரிப்பு மற்றும் துணைக் கருவிகளுடன் போவோம்: விடுதலைப் பணிகளுக்கு தேவையான இறை வார்த்தைகளோடு செல்ல வேண்டும். திருவிவிலியம், சூழலுக்கு ஏற்ற இறைவார்த்தைகள், அட்டைகள், பாடல் புத்தகங்கள், சிறு சிறு நூல்கள், படங்கள் போன்றவற்றோடு போவோம். அறுவடை செய்யப் போகிறவர்கள், களை எடுக்கப் போகிறவர்கள் அல்லது ஏதாவது தொழில் செய்யப்போகிறவர்கள் உரிய கருவிகளுடன் தானே செல்ல வேண்டும். எனவே ஆயத்தத்தோடு விழிப்போடு தேவையானவற்றை எடுத்துக் கொண்டு போவோம்.

6. ஆழமான, அசைக்க முடியாத, இறை நம்பிக்கையோடு போவோம்: இறை நம்பிக்கையினால் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்று திரு விவிலியம் முழுவதும் பறைசாற்றப்படுகிறது (மத் 8:13, மத்9:22,மத்15:28,மத்17:20,மத் 21:22,மாற்5:34,மாற்11:24,யோவா11:40). மேலே உள்ள இறை வார்த்தைகளை வாசித்து பாருங்கள். நீங்கள் நம்பியபடியே நிகழும் என்ற மையக்கருத்தை இயேசு ஆண்டவர் கூறியிருக்கிறார். இந்த களப்பணிக்கு, மக்கள் விடுதலை பெற அசைக்க முடியாத, ஆழமான நம்பிக்கை நமக்கு தேவை. எனவே இறை நம்பிக்கையோடு போவோம்.

7. கனிவோடு போவோம்: நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன் (மத்11:29) என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறுகிறார். அதுமட்டுமல்ல என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்றும் கூறுகிறார். இந்த விடுதலைப் பணிக்கு கனிவு மிக மிக அவசியம். 'அன்புக்காக ஏங்குபவர்கள், வீட்டிலேயே சிறையில் வாழ்பவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், ஓரங்கட்டப்பட்டவர்கள் என்று பலர் இல்லங்களில் தனிமைப்படுத்தப்பட்டு வாழ்கிறார்கள். நாம் இயேசு ஆண்டவரிடம் பெற்றுக் கொண்ட கனிவும் மனத்தாழ்மையும் மட்டுமே, அதற்கு மருந்து. நம்முடைய கனிவான தொடுதல், பேசுதல் அவர்களுக்கு மாபெரும் விடுதலையை பெற்றுத்தரும். அன்னை தெரசாவின் வாழ்வை கவனித்தால் இது புரியும். 'கடவுளே இல்லை' என்ற கொள்கையுடைய முன்னாள் மேற்குவங்க முதல்வர் ஜோதிபாசு 'எனது மார்க்சிய கொள்கைகளை தடுமாற வைக்கிறார் அன்னை தெரசா. ஏனெனில் இறைவனின் நன்மை தனத்தின் மீது நம்பிக்கை வைக்க அவர் என்னை தூண்டுகிறார்' என்கிறார்.' அன்பின் உருவம் என்ன? பிறருக்கு உதவி செய்ய அதற்கு கரங்கள் உண்டு. எளியவர், தேவையில் உள்ளவரிடம் ஓட அதற்கு கால்கள் உண்டு. துயரத்தையும் வேதனையையும் காண அதற்கு கண்கள் உண்டு. மக்களின் பெருமூச்சுகளையும் அழுகையையும் கேட்க அதற்கு காதுகள் உண்டு. இதுதான் அன்பின் உருவம்' என்கிறார் புனித அகுஸ்தினார். யாருக்கும் வேண்டாதவராய் இருத்தல் தான் மிகப்பெரும் நோய் என்கிறார் அன்னை தெரசா. காணும் மக்களிடம் எல்லாம் பரிவு கொண்டவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. எனவே கனிவோடு போவோம்.

8. தியாகத்தோடு போவோம்: நம் குடும்பத்தை விட்டு, நாம் வாழ்ந்து வருகிற சூழலை விட்டு, வசதிகளை விட்டு விட்டுத்தான் களப்பணிக்கு செல்கிறோம். அதை மகிழ்ச்சியோடு செய்வோம். ஒன்றை இழந்தால் தான் இன்னொன்றை பெற முடியும். அந்த தியாகத்தில் பெரு மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது என்பது. அந்த விடுதலைப் பணி முடிந்து வரும் போது தான் நம்மால் உணர முடியும் ஆன்மாவை கடவுளின் களஞ்சியத்தில் சேர்க்க பல்வேறு தியாகங்களை செய்தே ஆக வேண்டும் .எனவே தியாகத்தோடு போவோம்.

9. துணிச்சலுடன் போவோம்: திரு விவிலியத்தில் ஏறக்குறைய 366 தடவை 'அஞ்சாதே' என்று கடவுள் சொல்வதாக இறையியல் அறிஞர்கள் கூறுகின்றனர். எந்தவிதமான அச்சமும் தேவையில்லை. கடவுள் நம்மோடு இருக்கிறார். 'இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' என்று சொன்ன வாக்கு மாறாத கடவுள். நம்மோடு இருக்கிறார்.எனவே துணிச்சலுடன் பணிக்குப் போவோம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

நற்பணி **அ. சகாயராஜா**

⦿ சிவகங்கை மாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 5.01.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS. ராணி, நற்பணி K. ஜஸ்டின், நற்பணி S. இராஜேந்திரன் ஆகியோர் வழிடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -II காளையார்கோவில் தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 05.01.2005 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி V.செங்கோல்மேரி, நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -III தங்கச்சிமடம் புனித குழந்தை தெரசாள் கோவிலில் 11.01.2025 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி X. லூர்துமேரி, நற்பணி J.ரபேக்கா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 12.01.2025 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம் அவர்கள் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -V சிவகங்கை வியான்னி அருள்பணி மையத்தில் 12.01.2025 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி A. பிரான்ஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 12.01.2025 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜ், நற்பணி J. அருள் இளாங்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VII அமைதியகம் காயாவயலில் 19.01.2025 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி Sr. பச்சை ஜோதி, நற்பணி S.சகாயராணி, நற்பணி P.அமலோற்ப ஆரோக்கிய ராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VIII சாயல்குடி புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 19.01.2025 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரிய நாயகம், நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. சந்திரபுஷ்பா ஆசியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி-IX இராசசிங்கமங்கலம் தூய ஆவியார் கோவிலில் 20.01.2025 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி மேரி புஷ்பம், நற்பணி A. ஆரோக்கியசாமி, நற்பணி S. தைனேஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ தஞ்சை மறைமாவட்டம் திருமயம் பங்கில் புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி 5.1.2025 இல் நடைபெற்றது. நற்பணி L. ஆரோக்கியசாமி, மற்றும் செயலர் வழிநடத்தினார்கள். முதல் பயிற்சி 26.1.2025 அன்று நடைபெற்றது. 27பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி மரியகிரகோரி, நற்பணி அந்தோணி சேவியர் ஆகியோர் வழிநடத்தினர்.

ஜனவரி 2025

## கடந்த மாதச் செயல்பாடுகள்

- 0101. 2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 29 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி A. விக்டோரியாராணி, நற்பணி B. ஸ்டெல்லாமேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

- 01.01.2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 78 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி J.மேரிபுஷ்பம், நற்பணி P. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

- 11.01.2025 முதல் 18.01.2025 வரை அனைத்து வட்டாரங்களிலும் அம்புரோஸ் அறநெறி அமைப்பு உறுப்பினர்கள் நிதி திரட்டினார்கள் பணியாளர்கள் மகிழ்வுடன் வரவேற்று தாராள உள்ளத்தோடு தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள்.

- 16.01 2025 அன்று சாயல்குடி பங்கு மேல முந்தல் கிராமத்திற்கு முத்துப்பேட்டை வட்டார பணியாளர்கள் களப்பணிக்கு சென்று வந்தார்கள்.

- யூபிலி ஆண்டில் இந்திய அளவில் விவிலிய மாநாடு 21.22.23 ஆகிய நாட்களில் வேளாங்கண்ணி அருள் தளத்தில் நடைபெற்றது. நற்பணி சகாயராணி, நற்பணி பெமிலா ஆகியோர பங்கேற்றனர்.

ஜனவரி 2025

## வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**ஆவுடைப்பொய்கை வட்டாரம்**

ஆவுடைப்பொய்கை வட்டாரத் தியானக் கூட்டமானது 05.01.2025 அன்று பேதுரு நகரில், நற்செய்திப் பணியாளர்கள் ஜான் கென்னடி, ஆரோக்கியமேரி இல்லத்தில் காலை 10:30 மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி சத்தியேந்திரன் கலந்து கொண்டு நற்செய்திப் பணியாளராகிய நான் களப்பணி பற்றி அறிந்திருக்கிறேனா? என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். 30 பணியாளர்கள் கலந்து கொண்டனர் மாலை நான்கு மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி **வில்லியம்**, வட்டாரக் கண்காணிப்பாளர்

**சருகணி வட்டாரம்**

சருகணி வட்டார நற்செய்தி பணியாளர்கள் தியானக் கூட்டம் 05.01.2025 அன்று சருகணி திருஇருதயங்களின் கோவில் வளாகத்தில் காலை 10.30 மணியளவில் துவங்கியது. தொடர்பாளராக நற்பணி ஜெ.ஆரோக்கியசாமி அவர்கள் கலந்து கொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் களப்பணி பற்றி அறிந்திருக்கின்றேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார்கள் அனைவருக்கும் இதழ் மற்றும் களப்பணி படிவம் வழங்கப்பட்டது. பணியாளர்கள் படிவம் நிரப்பி வழங்கினார்கள், தன்னார்வ நிதி மற்றும்

அம்புரோஸ் அறநெறி அமைப்பு நிதி மற்றும் தணிக்கை பற்றி பேசப்பட்டது. யூபிலி ஆண்டு செபம் செபிக்கப்பட்டது இறுதியாக கொள்கைப்பாடலுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது. 31 நபர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி **லூயி ஆரோக்கியசாமி ,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**புளியால் வட்டாரம்**

புளியால் வட்டாரத் தியானக் கூட்டம் 12.01.2025 அன்று கடம்பனேந்தல் புனித சூசையப்பர் கோவிலில் காலை 10:30 மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி சத்தியேந்திரன் கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளராகிய நான் களப்பணி பற்றி அறிந்திருக்கிறேனா?' என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். 16 பணியாளர்கள் கலந்து கொண்டனர். மாலை நான்கு மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி **ஜான் போஸ்கோ,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**மானாமதுரை வட்டாரம்**

மானாமதுரை வட்டாரத் தியானக் கூட்டம் 19.01.2025 அன்று புனித குழந்தை தெரசாள் கோவில் வளாகத்தில் உள்ள சிறுமலர் கூடத்தில் காலை 10:30 மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி. சத்தியேந்திரன் கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளராகிய நான் களப்பணி பற்றி அறிந்திருக்கிறேனா?' என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். 28 பணியாளர்கள் கலந்து கொண்டனர். மாலை நான்கு மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி **புஷ்பராஜ்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**பாம்பன் வட்டாரம்**

பாம்பன் வட்டாரத் தியானக் கூட்டம் 18.01.2025 சனிக்கிழமையன்று அக்காள்மடம் புனித சவேரியார் கோவிலில் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. நற்பணி GMS ராணி அவர்கள் கலந்துகொண்டு களப்பணி பயிற்சி தியானத்தை செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள் 17 பணியாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் மாலை 3.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி S. **விமலாராணி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**ஆர்.எஸ் மங்கலம் வட்டாரம்**

ஆர்.எஸ். மங்கலம் வட்டாரக் களப்பணிப் பயிற்சி தியானக்கூட்டம் 19.01.205 ஞாயிறன்று சூரமடை கிராமத்தில் நற்பணி கமலம் அவர்கள் இல்லத்தில் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு களப்பணி பயிற்சி தியானத்தை நெறிப்படுத்தினார்கள் 27 பணியாளர்கள் கலந்து கொண்டனர்

நற்பணி **தைனஸ்மேரி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**இராமேஸ்வரம் வட்டாரம்**

இரமேஸ்வரம் வட்டாரக் களப்பணி பயிற்சித் தியானம் 18.01.2025 சனிக்கிழமையன்று நற்பணி R.ஹெர்மஸ் கிறிஸ்து அவர்கள் இல்லத்தில் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. நற்பணி M மரிய கிரகோரி தொடர்பாளராகக் கலந்துகொண்டு களப்பணி பயிற்சி தியானத்தை நெறிப்படுத்தினார்கள். 12 பணியாளர்கள் கலந்து கொண்டனர்

நற்பணி P. **அந்தோணியம்மாள்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

# ஆடுகளுக்கு வாயில் நானே

நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன் (திவெ 3:20) நம் ஆண்டவர் ஏன் கதவு அருகில் நின்று தட்டுகிறார்? ஏனெனில் அவர் நம்மைத் தேர்ந்து கொண்டவர். இன்று என்னைப் போல அதிகாலையில் எழுந்தாயா? முதலாவது என்னைத் தேடினாயா? திருவிவிலியம் வாசித்தாயா? என் பாதம் அமர்ந்து நீ வாசித்த பகுதிகளை தியானித்தாயா? பின்பு எவ்வளவு நேரம் இறைவேண்டல் செய்தாய்? யாருக்காகவெல்லாம் செபித்தாய்? உன் உள்ளத்தில் அமைதி ஏற்பட்டதா? உன் வீட்டில் உன்னுடன் இருப்பவர்கள் என் அமைதியை நான் அருளும் மீட்பை கண்டு கொண்டார்களா? நீ மனநிறைவோடு இருக்கிறாயா? என்று நம்மை விசாரித்து நம்மோடு உறவாட நாம் கொண்டிருக்கும் மகிழ்ச்சியில் அவரும் மகிழ அவர் நம் உள்ளமாகிய வீட்டுக் கதவருகில் நின்று தட்டிக் கொண்டே இருக்கிறார். (திவெ 3:20) அன்று ஏரோது அரசன் பேதுருவை கைது செய்து சிறையில் அடைத்தான். திருஅவை மக்கள் ஒன்றுகூடி உருக்கமாகக் கடவுளிடம் வேண்டினார்கள். வானதூதர் வந்து பேதுருவை விடுவித்தார். உடனே பேதுரு புறப்பட்டு மாற்கு எனப்படும் யோவானின் தாயாகிய மரியாவின் வீட்டிற்குப் போனார். அங்கே பலர் ஒன்று கூடி இறைவேண்டல் செய்து கொண்டிருந்தனர். பேதுரு கதவை தட்டியபோது ரோசி என்ற பணிப்பெண் யார் என்று பார்க்க வந்தார். அது பேதுருவின் குரல் என்று அறிந்ததும் மகிழ்ச்சியோடு உள்ளே ஓடிப் போய் பேதுரு வந்திருக்கிறார் என்று அறிவித்தார். அவர்கள் உனக்குப் பித்துப் பிடித்து விட்டதா? என்று கேட்டார்கள். ஆனால் அந்தப் பெண் அடிக்கடி பேதுருவின் குரலைக் கேட்டுப் பழகியிருந்ததால் அதை உறுதிப்படுத்தினார். பேதுரு விடாமல் கதவைத் தட்டியதால் அவர்கள் கதவைத் திறந்து பேதுருவைக் கண்டபோது மலைத்துப் போனார்கள். ஏனென்றால் பேதுருவை சாதாரண காவலில் வைக்கவில்லை. அவர் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தார். மூன்று காவல் நிலைகள் இருந்தன. இருப்பினும் அவர்கள் முதலாம் காவல்நிலையையும் இரண்டாம் காவல் நிலையையும் கடந்து வரும்போது இரும்பு வாயில் தானாகவே அவர்களுக்கு திறந்தது. (திப 12:6-16) நம் கடவுள் எவரும் பூட்டமுடியாதவாறு திறந்து விடுபவரும் எவரும் திறக்க முடியாதவாறு பூட்டிவிடுபவருமான வல்லமை நிறைந்தவர் (திவெ3:7).

சக்கேயு வீட்டில் ஆண்டவர் தங்க வேண்டும் என்று கேட்டபோது அவர் மகிழ்ச்சியோடு ஓடி வந்து தன் வீட்டுக் கதவைத் திறந்து அவர் உள்ளே வந்து தங்கும்படி அனுமதித்தார். ஆண்டவர் சக்கேயுவிடம் கடந்தகால வாழ்வைப் பற்றி எதுவும் பேசவில்லை. சக்கேயு ஆண்டவரின் குரலுக்குச் செவி கொடுத்து அவர் வீட்டுக் கதவைத் திறந்ததால் எத்தனைப் பெரிய மாற்றம். சுற்றி இருந்தவர்கள் பாவியிடம் தங்கப் போகிறாரே என்று சக்கேயுவை ஒரு பாவியாக மட்டுமே பார்த்தார்கள். ஆனால் ஆண்டவர் சக்கேயுவின் உள்ளத்தைப் பார்த்தார். சக்கேயுவின் உள்ளம் இப்போது உடைக்கப்பட்டு ஆண்டவர் தங்குவதற்கு ஏதுவாக மாறியிருந்தது. அவருக்கு மீட்பை கொடுத்தது மட்டுமல்ல. இவரும் ஆபிரகாமின் மகன் என்ற உயர்வையும் கொடுத்தார். (லூக் 19:1-10) மற்றவர்கள் அவரை ஒரு பாவியாக பார்த்தாலும் ஆண்டவர் அவரை ஆபிரகாமின் வழி மரபினராகப் பார்த்தார். நூற்றுவத் தலைவர் ஒருவர் ஆண்டவரிடத்தில் உதவி வேண்டி ஐயா என் பையன் முடக்குவாதத்தால் மிகுந்த வேதனையுடன் படுத்துக் கிடக்கிறான் என்றார். அவரின் உள்ளத்து வேதனையை அறிந்த ஆண்டவர் உன் வீட்டிற்கு வந்து அவனை குணமாக்குவேன் என்றார். ஆனால் நூற்றுவத் தலைவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மறுமொழியாக ஐயா நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். நீர் இங்கே இருந்தபடி ஒரு வார்த்தை சொல்லும் அவன் குணம் பெறுவான் என்றார்.

ஆண்டவரின் வார்த்தை மீது அவ்வளவு நம்பிக்கை வைத்த நூற்றுவத் தலைவர் ஏன் ஆண்டவர் அவர் வீட்டிற்கு வர அனுமதிக்கவில்லை?

ஒரு வேளை அவரின் வீடு வெகு தொலைவில் இருந்திருக்கலாம். அல்லது ஆண்டவர் வந்து தங்கும் அளவுக்கு வசதி குறைவாக இருந்திருக்கலாம்? அதற்கு வாய்ப்பில்லை ஏனெனில் நூற்றுவத் தலைவர் ஓர் உரோமை அரசின் உயர் அதிகாரி அவரது வீடு நல்ல வசதிகளோடுதான் இருந்திருக்கும். ஆனால் அவர் உரோமை அரசின் கட்டளைகளை அப்படியே நிறைவேற்ற வேண்டியிருந்திருக்கும். அதனால் பலருடைய வேதனைகளுக்கு அவர் காரணமாக இருந்திருக்கலாம். நம் ஆண்டவரை அவர் பார்த்தவுடன் அவர் உள்ளத்தில் கடந்தகால பாவ உணர்வு உள்ளத்தில் தோன்றியிருக்கலாம். எனவேதான் இப்படிப்பட்ட மீட்பை அருளுகின்ற ஆண்டவர் தங்குவதற்கு தகுதி உள்ளதாக கருதாமல் நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன் என்கிறார். ஆண்டவர் அவருடைய நொறுங்குண்ட உள்ளத்திலிருந்து புறப்பட்ட வார்த்தையைக் கேட்டு இஸ்ரயேலர் எவரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை என்று வியந்தார். இரண்டாவது ஆண்டவர் நம்மோடு தங்குவதற்கு மட்டுமல்ல அவரது (மத் 8:5-11) குரலுக்கு செவி கொடுத்து நாம் கதவைத் திறந்தால் உள்ளே வந்து நம்மோடு உணவு அருந்துவதாகக் கூறுகிறார். நம் ஆண்டவருக்கு எப்படிப்பட்ட உணவு பிடிக்கும்? எதை விரும்பி உண்பார்? ஒரு முறை சீடர்கள் உணவு வாங்கி வந்து அவரை உண்ணும்படி அழைத்தனர். ஆனால் ஆண்டவர் நான் உண்பதற்கு உரிய உணவு ஒன்று உண்டு என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு என்றார் (யோவா 4:31-34) தந்தையின் திருவுளம் நம் வழியாக இவ்வுலகில் நிறைவேறவும் நாமாக அதை நிறைவேற்ற இயலாது என்பதையும் அறிந்தவராக நமக்குள் தங்கியிருந்து நம்மை வழி நடத்தவே நம் கதவு அருகில் நின்று தட்டுகிறார்.

அன்று மார்த்தா மரியா வீட்டிற்கு ஆண்டவர் சென்றிருந்தபோது மார்த்தா பலவற்றைக் குறித்து கவலைப்பட்டார். ஆனால் மரியா அமைதியாக ஆண்டவர் பாதம் அமர்ந்து தனது உள்ளக் கதவைத் திறந்து அவரது குரலுக்குச் செவி கொடுத்தார். அதனால் மரியா நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டார் என்று ஆண்டவர் பெருமிதம் கொண்டார். (லூக் 10:38-42) இன்றைக்கு வெளி அடையாளங்களை அதிகம் தேடுவதால் ஆண்டவரது குரல் நம் செவிகளில் படுவதில்லை. நம் ஆண்டவர் மனித உள்ளங்களுக்காகப் பேராவலோடு ஏங்குகிறவர் (யாக் 4:5) இன்றைக்கு களப்பணிக்குச் செல்ல ஆயத்தமாகும் இந்நாட்களில் ஒவ்வொரு நாளும் அவர் பாதம் அமர்ந்து அவரது குரலுக்கு செவி கொடுத்து நாம் செல்லவிருக்கும் இடங்களிலெல்லாம் சந்திக்கின்ற மக்களுக்குத் தேவையான விடுதலை வாழ்வு கிடைக்க நல்லதொரு தயாரிப்போடு செல்ல முற்படுவோம். புனித பவுல் உரோமை நகர மக்களைச் சந்திக்குமுன்பே நான் உங்களைக் காண ஏங்குகிறேன். அங்கே வந்து உங்களை உறுதிபடுத்துவதற்காக ஆவிக்குரிய கொடை ஏதேனும் உங்களுக்கு வழங்க வேண்டுமென விழைகிறேன் என்கிறார். (உரோ 1:11) நாமும் செல்லவிருக்கும் பணித்தளங்களுக்கு தூய ஆவியானவரின் கொடை ஏதேனும் சுமந்து செல்ல ஆர்வம் கொள்வோம்.

நற்பணி **ஆ.விசுவாசம்,** செஞ்சை.

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே, அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம். | **கலாத்தியர் 5:25** |

# பிப்ரவரி 2025 வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 02 | செஞ்சை<br>9442758641 | செயலர்<br>9787967272 |
| 2. | 09 | செக்காலை<br>9150579311 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 3. | 09 | காளையார்கோவில்<br>9444712047 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 4. | 09 | மகிண்டி மிக்கேல்பட்டணம்<br>9524495693 | நற்பணி GMS. ராணி<br>9655264448 |
| 5. | 16 | சி.கே. மங்கலம்<br>9626303365 | நற்பணி L. ஜோப் இருதயம்<br>9943165532 |
| 6. | 16 | இராம்நகர்<br>9442959569 | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 7. | 16 | கமுதி<br>9443210772 | செயலர்<br>9787967272 |
| 8. | 22 | அரிமளம்<br>9787967272 | செயலர்<br>9787967272 |
| 9. | 23 | சிவகங்கை<br>9943165532 | நற்பணி M. மரியகிரகோரி<br>9485965799 |
| 10. | 23 | சாலைகிராமம்<br>8526754557 | நற்பணி M. விசுவாசம்<br>9442759641 |
| 11. | 23 | பரமக்குடி<br>9443503294 | செயலர்<br>9787967272 |
| 12. | 23 | இராமநாதபுரம்<br>9486037839 | நற்பணி GMS. ராணி<br>9655264448 |
| 13. | 23 | முத்துப்பேட்டை<br>9940745169 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>8248899427 |

அறிவியல் உலகத்தில் நிரூபிக்கப்படாததால் நரகம் ஒன்று இல்லவே இல்லை. அது பழிவாங்கும் எண்ணம் கொண்டோரின் கற்பனைப் படைப்பு. அப்படி ஒன்று இருந்தால் அதை ஏற்ப்படுத்தியவர் மிகக் கொடூரமானவராகவே இருக்க வேண்டும் எனவும் இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி நரக வேதனைப்படுத்துகின்றனர் எனவும் பலர் ஆதங்கப்படுகின்றனர். நரகம் என்பது ஒரு கற்பனை என்று கூற மனித மனங்களெல்லாம் ஆவல் கொள்கின்றன. இது கற்பனையாக இருந்தால் நலமாக இருக்கும் என்ற ஆசை எமக்கும் உண்டு. நிலைவாழ்வு எப்படி மனித அறிவிற்கும் கற்பனைகளுக்கும் எட்டாததோ! அதுபோல, நரகமும் மனித அறிவிற்கும் கற்பனைகளுக்கும் அப்பாற்பட்டதே. இறைவன் ஏற்படுத்தியதை எவராலும் மாற்றவும் மறுக்கவும் முடியாது. மறுப்பது இறைநீதிக்கு எதிரானது.

> அழுகையும் அங்கலாய்ப்பும்
> நிறைந்திருக்கும் தீச்சூளை (மத் 13:42)

பாதாளம் போன்று நரகம் தற்காலிகமானதல்ல (யூதா 6) ஆளும் அதிகாரத்தைக் காத்துக்கொள்ளாமல் தங்கள் உறைவிடத்தை துறந்து விட்டவர்கள் முடிவில்லா தண்டனை அனுபவிக்கும் இடம் (மத் 25:41,46). அணையாத நெருப்பும் கந்தகமும் எரியும் நெருப்பு ஏரி (திவெ 21:8, மத்18:8) அங்கே தள்ளப்பட்டவர்களின் கீழ்படுக்கை புழுக்களாகவும், பூச்சிகள் போர்வையாகவும் இருக்கும் (ஏசா14:11). அவர்களை அரிக்கும் புழு சாவதில்லை. அவர்களை எரிக்கும் நெருப்பு அணைந்து போவதில்லை. அவர்கள் அருவருப்பாக இருப்பார்கள் (எசா 66:24). அது அழுகையும் அங்கலாய்ப்பும் நிறைந்திருக்கும் தீச்சூளை(மத் 13:42,25:30). பொல்லார், கடவுளை மறந்தவர், வேற்றினத்தார் (திபா 9:17), வாழ்வின் நூலில் பெயர் எழுதப்படாதோர் (திவெ 20:15), கோழைகள், நம்பிக்கை இல்லாதோர், அருவருப்புக்குரியோர், கொலையாளிகள், பரத்தைமையில் ஈடுபடுவோர், சூனியக்காரர், சிலைவழிபாட்டினர், பொய்யர் ஆகிய அனைவரும் நெருப்பும் கந்தகமும் எரியும் ஏரியாகிய நரகத்தில் தள்ளப்படுவார்கள். இது முடிவில்லா இரண்டாம் சாவு (திவெ21:8) எனக் கூறப்படுகிறது. ஆகவே, அலகையோடும் அதன் தூதர்களோடும் சேர்ந்து கொடுமை செய்வோருக்கு நரக தண்டனை உண்டு.

அதிலும் அவர்கள் செயல்களுக்கேற்ப தண்டனை உண்டு என்பதை திருவிவிலியம் தெளிவாகக் கூறுகிறது. பாதாளத்தில் பரிதவிக்கும் செல்வந்தரைப் போல (லூக் 16:19-31) உலகம் ஒரு நொடிப்பொழுது நரகமாக மாறினால் மனிதன் வாழ்வு பெறும் வழியைக் கண்டு கொள்வான். நரகம் முடிவில்லா தண்டனை அனுபவிக்கும் இடம் என்பதும் முடிவில்லா தண்டனையைக் கொடுக்க கடவுள் ஒரு காலத்தை குறித்து வைத்துள்ளார் என்பதும் அந்நாளில், அவரது சீற்றம் வெளிப்படும் (2பேது 2:4-9) என்பதும் அலகைக்கும் அதன் தூதர்களுக்கும் தெரியும் (மத் 8:29, திவெ 12:12) ஆகவே, நரகம் இல்லை என்று கூறுவதும் மறுப்பதும் தவறான போதனையாகும். நாம் வாழும் இந்த அருளின் காலத்தில் கடவுள் நமக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கியிருக்கிறார் என்பதால் யாராவது கடவுளிடம் நரகத்தை நீக்கிவிடும் என்று கூற முடியுமா? கடவுளுக்கு ஆலோசனை கூற நாம் யார்? நாம் என்ன லூசிபரின் உதவியாளரா? உலகனைத்தையும் தன் ஆளுகைக்குள் உட்படுத்தி அழிக்க நினைக்கும் அலகைக்கும் அதன் தூதர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நரகத்தை நாம் எப்படி இல்லை என்று சொல்ல முடியும்! நன்மை செய்வோருக்கு முடிவில்லா வாழ்வு உண்டு என நம்பிக் கொள்வது போல, கொடுமை செய்வோருக்கு முடிவில்லா தண்டனையும் உண்டு என்பதை கிறிஸ்தவ மார்க்கம் மட்டுமல்ல எல்லா மார்கங்களும் எடுத்துரைக்கிறது.

> அணையாத நெருப்பும் கந்தகமும் எரியும் நெருப்பு ஏரி (திவெ 21:8)

நரகம் என்பது மண்ணுலகில் கெடுதல் செய்து இறந்தவர்களுக்கு தண்டனை நிறைவேற்றும் இடம் என்றும் அங்கு, எல்லா வகை கொடிய துன்பங்களும் நிறைந்திருக்கும் என்றும் கூறப்படுகிறது. அதாவது, பூமியில் பாவம் செய்த ஆன்மா தண்டனை அனுபவிக்கும் இடமாகவும் கருதப்படுகிறது. மதநம்பிக்கை- யற்றோரையும், தீயவழியில் சென்றவர்களையும் இறைவன் அதள பாதாளத்தில் தள்ளுகிறான் என்று ரிக்-வேதம் (9:73) கூறுகின்றது.

இவ்வுலகத்தில் மனிதனின் செயல்களுக்கேற்ப கூலியும், தண்டனையும் வழங்கப்படுவதே மறுமைநாள் அந்நாளில், 'நரக நெருப்புக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்' என்ற அல்லாஹ்வின் எச்சரிக்கையின் அடிப்படையிலேயே

முஸ்லீம்கள் நரகத்தை நம்புகிறார்கள். அநீதி இழைத்தபின் மன்னிப்பு கேட்டு திருத்திக் கொண்டவரை அல்லாஹ் மன்னிப்பான்; அல்லாஹ் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன் என்று திருக்குர்ஆன் (5:39) கூறுகின்றது

**கடவுளின் அன்பும் நீதியும்:** அன்புள்ள கடவுளை நல்ல தந்தை, தாய், மருத்துவர், கணவர், நல்ல ஆயர் (11:1.3.4) ஆகியோருக்கும், இறுதி தீர்ப்பு நாளில், வெளிப்படும் நீதியுள்ள கடவுளை சீறிப்பாயும் சிங்கம், மறைந்திருந்து தாக்கும் வேங்கை, குட்டியைப் பறிகொடுத்த பெண் கரடி (13:7- 8) ஆகிய கொடிய மிருகங்களுக்கும் ஒப்பீடு செய்து உருவ ஓவியங்கள் மூலம் ஓசேயா இறைவாக்கினர் சித்தரித்துக் காட்டியுள்ளார். இன்றைய நாட்களில் இறை அன்பைப் பற்றி அதிகம் பேசும் பணியாளர்கள் இறைநீதியை பற்றிப் பேசவிரும்புவதில்லை. இறை அன்பையும், இறை நீதியையும் சமநிலையில் போதிப்பவரே சிறந்த பணியாளர். இவ்விரு பண்புகளையும் இறைவனில் காணும் அறிவே சரியான ஆன்மீக அறிவாகும். கடவுள் அன்புள்ளவர் என்றாலும் அவர் நீதியுள்ளவர் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

'நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால், கடவுள் நம்மீதும் வைத்த அன்பு வெளிப்பட்டது' (1யோவா 4:9) இதுபோலவே, தீர்ப்புநாளில் இறை நீதியும் வெளிப்பட வேண்டும். ஏனெனில் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அழிக்கும் அளவுக்கும் கடவுள் உலகில்மேல் அன்பு கூர்ந்தார் (யோவா 3:16), ஆக கடவுளின் மீட்புத் திட்டம் அத்துணை தியாகம் நிறைந்தது. கடவுளின் மாபெரும் மீட்பை மறுத்து, வெறுத்து, எதிர்த்தும் செயல்படுவோர் இறைநீதியின்படி நரக தண்டனை அடைவர். எவரையும் நரகத்திற்கு அனுப்புவது கடவுளின் விருப்பம் அல்ல, எல்லோரும் மனம்மாற வேண்டுமென கடவுள் விரும்புகிறார் (2பேது3:9). தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த கடவுள், தம் மகனோடு நிலைவாழ்வை நமக்கு அருளாதிருப்பாரோ (உரோ 8:32). ஏனெனில் எல்லா மனிதரும் மீட்பு பெற வேண்டுமென அவர் விரும்புகிறார் (1திமோ 2:14). ஆக, கடவுவின் ஈடு இணையற்ற அன்பிலிருந்து எதுவும் நம்மை பிரிக்கவே முடியாது என்ற நம்பிக்கையில் நாம் வாழ்ந்தாலும் இறைநீதிக்கு முன் நின்றாக வேண்டும் என்ற இறை அச்சத்தோடு எல்லோருக்கும் நன்மை செய்து வாழ்வோம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



பாலைவனத்தில் 40 நாட்கள் நோன்பு இருந்து பணி வாழ்வினைத் துவங்கிய இயேசுவே!

தவக்காலப் பணிகளுக்காக எங்களையே நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கும் வேளையில், வரவிருக்கும் தவக் கால அனுபவம், கனமழையில் நோவாவைப் போல, சீனாய் மலையில் மோசே போல, ஒரேபு மலையில் எலியாவை போல, நினிவே நகரத்தில் யோனா போல, பல அனுபவங்களை உம்மிடம் இருந்து கற்றுக்கொண்டு நாங்கள் ஆன்ம பலம் பெறவும் அதற்கென எம்மைத் தயாரிக்கும் மன நிலையைத் தர வேண்டும் என்றும் இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

## இது சாத்தியமா ?

**வான தூதர்1:** சீமோன், அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரை இயேசு தன் சீடர்களாக முதன் முதலில் (மா.1: 16-20) அழைத்தாரே! அவர்கள் இறையியல் பட்டம் பெற்றவர்களா என்ன? சாதாரண மீனவர்கள் தானே!

**வான தூதர்2:** மீனவர்கள் தானே என்று சாதாரணமாக எப்படி நினைத்து விட்டாய்? அந்த மீனவர்கள் எவ்வளவு பொறுமையுடையவர்கள்! வலையைப் போட்டவுடன் மீன் கிடைத்து விடப் போவதில்லை. மிகப் பொறுமையாய்க் காத்திருந்து, மீன்பிடித்து இருப்பார்கள்! எவ்வளவு புத்திக் கூர்மையோடு அந்தந்தக் காலத்தில் (season) அந்தந்த இடத்தில் வலையைப் போட்டால் என்னென்ன வகையான மீன்பாடு கிடைக்கும் என்று திண்ணமாய் முடிவெடுத்து இருப்பார்கள்! தண்டு வலிக்க படகை செலுத்துவதிலும், மீன்கள் நிறைந்த வலையை இழுத்து, கரைக்கு பத்திரமாய்க் கொண்டு வந்து கரைசேர்ப்பதிலும் எவ்வளவு கடின உழைப்பை மூலதனமாய் கொண்டிருப்பார்கள்!

**வானதூதர்2:** பொறுமையோடு காத்திருத்தல், புத்திக் கூர்மையோடு உள்ள திறமை, கடின உழைப்பு போன்ற நல்ல பண்புகள் இருந்தால் நற்செய்திப்பணியாளர்கள் அனைவருமே இயேசுவின் உண்மைச் சீடராவது சாத்தியம் தானே?

**வானதூதர்1:** ஆம், சாத்தியமே.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்



அந்தத் தாய் தன் மகளை அரசு பொது மருத்துவமனையில் இதய நோய் அறுவை சிகிச்சைக்காக கூட்டி வந்து சேர்த்து விட்டிருந்தாள். மருத்துவமனையின் சூழல்... ஒருபக்கம் நோயாளிகளின் அலறல் சத்தம். வேதனைக்குரல்கள் இன்னொரு பக்கம் இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் செல்லும் காட்சிகள். அந்த இடம் ஒரு திகில் நிறைந்ததாக இருக்க எப்படி இங்கே இருக்கப்போகிறோம்? என்று அந்த மகள் கண்ணீர்விட்டு அழுகிறாள். அந்ததாய் தேற்றி 'நமக்கு கடவுள் இருக்கிறார் கலங்காதே செபிப்போம் கடவுள் மட்டுமே இந்த சூழலில் நம்மோடிருந்து திடமளித்து வழி நடத்துவார்' என்று சொல்லி செபிக்க ஆரம்பித்தனர்.

பக்கத்தில் உள்ள இளம்பிள்ளைகள், சிறுமிகள் இதை வேடிக்கை பார்த்தனர். மறுநாள் இருவர் இவர்களோடு வந்து செபத்தில் உட்கார. அடுத்தடுத்த நாட்களில் அங்கிருந்த சிறுமிகள் அவர்களின் பெற்றோர் என்று ஒரு சிறு கூட்டம் ஆர்வமாய் செபிக்க வந்தனர். இறைப்பாடலை ஆசையோடு கேட்டு பாட முற்பட்டார்கள். பைபிள் கதைகளை கண்கள் மின்ன ஆர்வத்தோடு கேட்டனர். தினமும் அந்த செபநேரத்திற்காக காத்திருந்தனர். இப்போது அதே மருத்துவமனைதான் அதே சூழல் தான் ஆனால் அந்த கனத்த சுவர்களின் விரிசலில் ஒளிக்கீற்று உள்ளே நுழைந்தது. ஆண்டவரின் பிரசன்னம் அங்கே குடி கொண்டது. கவலை தோய்ந்த அந்த முகங்களில் ஒரு பிரகாசம். அந்த மனங்கள் தைரியப்பட்டன. அந்தத்தாய் அங்கு வந்து சேர்ந்ததன் அர்த்தத்தை புரிந்து கொண்டாள். 'நோய் அருளின் நுழைவாயில்'

வரும் பிப்ரவரி 11- ஆம் தேதி லூர்து அன்னையின் திருவிழா. நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்றைய நாளை 'உலக நோயாளிகள் தினமாக' சிறப்பிக்க அழைப்பு விடுத்துள்ளார். 'பூட்டப்பட்ட வீட்டிற்குள் ஒளி எவ்வாறு உள்ளே வரும். ஒரு கீறல் இருந்தால் தானே. அந்த கீறல் தான் நோய். அதன் மூலமே கடவுளின் ஆசீர் அருள் வெளிவரும்' என்கிறார் நம் திருத்தந்தை அவர்கள்.

'எதிர்நோக்கின் பயணிகளாக' என்ற சிந்தனையின் நீட்சியாக 'எதிர்நோக்கு என்பது எதிர்காலம் குறித்த நேர்மறைக் கருத்து மட்டுமல்ல. அது நன்மைத்தனத்திற்கான மனிதர்களின் அர்ப்பணத்தால் ஊட்டம் பெறும் வாழ்க்கை 'என்கிறார் நம் திருத்தந்தை. அந்த ஊட்டம் நோயிலிருந்தும். வலியிலிருந்தும் வர முடியும். நோய் அது தரும் துன்பம் என்ன எதிர்நோக்கை தருகிறது? விவிலியத்தில் நோய் பாதித்தவர்களின் பயணம் எப்படி இருந்தது ? நோயினால் இறப்பை சந்தித்தனரா? வலுவிழந்து போயினரா? அல்லது அதை அருளின் அடையாளமாக்கி சான்று பகர்ந்தனரா? அவர்களை பின்தொடர்ந்து போய் சற்றே தியானிப்போம்.

**நோயை அருளின் அடையாளமாக்கியவர்கள் :**

ஆண்டவரின் வார்த்தை உயிருள்ளது ஆற்றல் மிக்கது ... இவையெல்லாம் இயேசுவைப் பின்பற்றியவர்களுக்கு அவரை அறிந்தவர்களுக்குத் தெரியும். ஆனால். பிற இனத்தவராகிய நூற்றுவர் தலைவரும் இயேசுவின் வார்த்தை போதும் என்று நம்பிக்கை வைத்து அவர் மகனைக் காத்துக் கொண்டாரே. துன்பம் அவருக்குள் ஏற்படுத்திய அருளால் அல்லவா?

மருத்துவர்கள் அனைவராலும் கைவிடப்பட்டு உள்ளதெல்லாம் செலவழித்து. ஒன்றுமில்லாமல் ஓரங்கட்டப்பட்ட இரத்தப்போக்குடைய அந்த பெண் இயேசுவின் அருளைத் திருடிக் கொண்டாள் என்று சொல்லலாம் அல்லவா? அவளிடம் ஊடுருவிய நம்பிக்கை ஒளி இயேசுவின் மேலாடையைத் தொட்டு அவரின் வல்லமையை எடுத்துக் கொண்டு குணப்பட்டதே.

இயேசுவோடு இருந்தவர்கள், அவரது உறவினர்களுக்குத் தெரியாத ஒன்று அந்தப் பார்வையற்ற பர்த்திமேயுவுக்கு எப்படித் தெரிந்தது? அவர் தாவீதின் வழிமரபு. மெசியாவான இயேசு. அவரால் தம்மை குணப்படுத்த முடியும் என்று எப்படி கண்டுபிடித்தார்? பார்வையற்ற நிலை அவரின் மனதின் ஜன்னல்களை திறந்து விட்டதோ. அதனால்தான் ஞானத்தோடு சரியான நேரத்தில் அவர் அதை வெளிப்படுத்தி கடவுளின் ஆசீரைப் பார்வையாய் பெற்றுக் கொண்டாரோ.

எத்தனையோ சான்றுகள் நம் கண்முன்னே கொட்டிக் கிடக்கின்றன. நோய்கள். பலகீனங்கள். துன்பங்கள் நெருக்கடிகள் அனைத்துமே கடவுளின் அன்பை வெளிப்படுத்தும் அடையாளங்களே. அவரின் அருளைப் பெற்றுக் கொள்ளவே கொடுக்கப்பட்ட கொடைகள் ஆகும். 'எனக்குத் துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே: அதனால். உம் விதிமுறைகளைக் கற்றுக் கொண்டேன்" ( திபா 119:71) என்று திருப்பாடல் ஆசிரியரால் பாட முடிந்தது.

**நோயில் வலிமை பெற்றவர்கள் :**

தூய பிரகிரினார் கால்களில் ஆறாத புண்களோடு வேதனையபட்டார். அதைப் பார்த்து பலரும் கேலி செய்தனர். அவர் கூறுவார் 'ஆண்டவர் எப்போதும் உங்களுக்குள் வர வேண்டுமென்றால் எது உங்கள் பலகீனமான புள்ளியோ அதன் வழிதான் வருவார். புண்கள். நோய்கள் இவையெல்லாம் இறைவன் அளிக்கும் ஆசீர்வாதமாகும்' ஆம்.இதுதான் புனிதர்களின் ஆன்மீக வலிமையாக இருந்தது.

தூயபவுல் அடியார் இப்படிச் சொல்வார் 'எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள்போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது. அது என்னைக் குத்திக் கொடுமைபடுத்தச் சாத்தான் அனுப்பிய தூதனைப் போல் இருக்கிறது ...' (2. கொரி 12.7) பவுலடியார அதை நீக்கிவிடுமாறு மூன்றுமுறை வருந்தி வருந்தி வேண்டியும் ஆண்டவர் 'அது அப்படியே இருக்கட்டும்ப்பா. உன் வலுவின்மை தான் உனக்கு வல்லமை. என் அருள் ஒன்றே உனக்குப் போதும்' (2கொரி 12:9)என்கிறார். இது உடலைக் கடந்து வலியை. தூய பவுல் ஆண்டவர் எதை விரும்பின ரோ அதை ஏற்றுக்கொண்டார் பிடிவாதமாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளவில்லை. எனவே தான் அந்த திருச்சபையின் தூணால் 'என் வலுமின்மையிலும் இகழ்ச்சியிலும்

இடரிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில், நான் வலுவற்றிருக்கும் போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்' என்று சொல்ல முடிந்தது. வேதனைக் கடந்து கடவுள் அருளில் திளைக்கும் நிலை.

அவர் மட்டுமல்ல புனிதர்கள் திருத்தூதர்கள், மறைசாட்சியர் போன்றவர்களின் வாழ்வை திரும்பி பார்த்தோமென்றால் அனைவருமே துன்பத்தில் துயரத்தில் இகழ்ச்சி அவமானங்களில் கொடிய நோய்களில் வேதனைப்பட்டவர்கள் தான். அந்த நிலையிலும் அவர்கள் பகர்ந்த சான்றும் நங்கூரமான நம்பிக்கை வாழ்வும் இறைவன்மேல் வைத்த எல்லையற்ற அன்பும் இறைப்பற்றுறுதியுமே அவர்களைப் தூய நிலைக்கு உயர்த்தி வைத்திருக்கிறது.

இறுதியாக...

சொல்வது எளிது அனுபவியவர்களுக்குத்தான் அதன் வேதனை தெரியும் என்பார்கள். உண்மைதான் 'நோயுற்றோரின் மன்றாட்டு, துன்புறுவோரின் மன்றாட்டு, துன்பநாளில் ஆறுதல் ... என்று பல திருப்பாடல்வரிகளில் சொல்லப்பட்ட வார்த்தைகளின்படி வாதையை வேதனையை அனுபவிக்கும் நோயாளிகள் அலறி அலறி வலிவலி என்று கதறித்துடிக்கும் நோயாளிகள் எத்தனை பேர்? நோயின் தாக்கங்கள் எந்த அளவு வருத்தங்களை அளிக்கிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம், அனுபவிக்கிறோம்.

'துன்பங்களைத் தாங்கிக் கொள்வது ஓர் அருள். நமது துன்ப வேளைகளில் இவ்வருளைக்கேட்க வேண்டும்' என்கிறார் நமது திருத்தந்தை அவர்கள். நோய் வரவில்லையா? நல்லது. வந்துவிட்டதா மிக நன்று. அங்கே நமது பணிக்கான வாசல்கள் இயல்பாய் திறக்கும். நமது நோய் விரைவில் குணமானால் அது நமக்கு மட்டுமே நல்லது. அதுவே தாமதமானால் அதன் மூலம் பல நோயாளிகள் பலனடையக் காரணியாக கடவுள் நம்மை பயன்படுத்தத் தூண்டுகிறார் என்பதை புரிந்து செயல்படுவோம். பிற நோயாளிகளுக்கு நமது வார்த்தைகளும் உதவிகளும் மருந்தாய், மென்மையான ஆறுதலூட்டும் வருடலாய் மாறுவதை அதன் மூலம் கடவுள் மகிமையடைவதை காண்போம் என்பது உறுதி. இது பணியாளர்களுக்கு கடவுள் அளித்த மாபெரும் அருள் ஆகும். புனித பவுலடியாரைப்போல ஆண்டவரின் அருளை பயனற்று போய்விடாதபடி சரியான விதத்தில் பயன்படுத்துவோம்.

அவரின் அருள் நோயின் வாயிலாக பொழியப்படும் புதிய ஆசீர்வாதங்கள் நிலை வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் கருவிகளாய் மாற்றம் பெறும். எந்நிலையிலும் தளராமனதுடன் 'நம்பிக்கையின் திருப்பயணிகளாக' தொடர்ந்து வலுவாய் தடம்பதித்து பயணிப்போம்.

நோயாளிகளை சந்தித்து ஆறுதல் கூறுவோம். வலுவூட்டும் உற்சாக வார்த்தைகளால் அவர்களுக்கு திடமளிப்போம். அவர் அளித்த அருள்வளங்களை வாழ்விலும் பணியிலும் பயன்படுத்துவோம். இறை ஆசீரோடு அன்னை கன்னி மரியாவின் பரிந்துரையும் நம்மை வழிநடத்தும் என்று உறுதிப்படுவோம்.

நற்பணி **ஜெஸி. P.**


**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்**
www.arulchandrunilayam.org

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 02. | சிறப்புக் களப்பணி பயிற்சி தியானக் கூட்டம் | செஞ்சை வட்டாரம் |
| 05 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 08 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 08. | புதிய பணியாளர்கள் பயிற்சி | குழந்தை தெரசாள் கோவில், தாங்கச்சிமடம் |
| 09. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில் இராமநாதபுரம், வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை. புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர். தந்தை ஜோசப் சேவியர் அரங்கம் காளையார்கோவில் |
| 09. | சிறப்புக் களப்பணி பயிற்சி தியானக் கூட்டம் | செக்காலை, காளையார்கோவில், மகிண்டி மிக்கேல்பட்டணம் |
| 11. | விரிவாக்க உள்ளுயிர்க் குழுக் கூட்டம் | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 16 | சிறப்புக் களப்பணி பயிற்சி தியானக் கூட்டம் | சி.கே. மங்கலம், இராம்நகர், கமுதி |
| 16 | தொடர் களப்பணி | சாயல்குடி பங்கு மேல முந்தல் |
| 16. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம், காயாவயல். புனித ஆரோக்கிய அன்னை கோவில் சாயல்குடி |
| 19. | நற்பணி கரோலின் இல்லத் திருமண அருளடையாளவிழா | காரைக்குடி |
| 22. | சிறப்புக் களப்பணி பயிற்சி தியானக் கூட்டம் | அரிமளம் வட்டாரம் |
| 23. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில், இராஜசிங்கமங்கலம் புனித அடைக்கலமாதா கோவில், திருமயம் |
| 23. | சிறப்புக் களப்பணி பயிற்சி தியானக் கூட்டம் | பரமக்குடி, சாலைக்கிராமம், இராமநாதபுரம், முத்துப்பேட்டை |
| 23. | தொடர் களப்பணி | அஞ்சுக்கோட்டை, இருதயபுரம் பங்குகள் |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 02.02.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி GMS. ராணி<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 08.02.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி<br>நற்பணி J. ரபேக்கா |
| 09.02.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி M. லூயிஸ் ஜான் போஸ்கோ |
| 09.02.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா |
| 09.02.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 09.02.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. மோட்சஅலங்காரம்<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 16.02.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S.சேசுராஜா |
| 16.02.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி GMS. ராணி<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. சந்திர புஷ்பா |
| 23.02.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி J. அருள்இளங்கோ<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 23.02.25 | அடைக்கலமாதா கோவில் திருமயம் | நற்பணி AR. சூசைராஜ்<br>நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி S. பால்ராஜ் |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

சில இழப்புக்கள் **வலிகளைத்** தருகின்றன.
சில இழப்புக்கள் **வலிமையைத்** தருகின்றன.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

கடவுள் சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார்: அதிலிருந்து விடுபட வழி செய்வார். (1 கொரிந்தியர் 10:13)

'அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்'(எபே6:15)

நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகள் அதாவது தயாரிப்புகள் பற்றித் தொடர்ந்து தியானித்து வருகிறோம். சீடத்துவாழ்வு வாழ்ந்து நற்செய்தியை அறிவிக்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவின் மனநிலையை ஆயத்த நிலையாகக் கொள்ள வேண்டும் என்று தியானித்து வருகின்றோம்.

கிறிஸ்து இயேசு பரிவுள்ளவராகவும், தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுறவராகவும் இருந்தார் என்றும், தந்தையோடு ஒன்றிப்பில் இருந்தார் என்றும், பிறர் புகழும் போதும் இகழும் போதும் சமநிலையில் இருந்தார் என்றும், நன்றி யுணர்வு மிக்கவராயிருந்தார் என்றும் தியானத்திருக்கிறோம். இம்மாதம் இயேசு தந்தையின் கட்டளைகளை கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்திருந்தார் என்பதைப் பற்றித் தியானிக்கவிருக்கிறோம்

'நான் தந்தையின் கட்டளைகளைக் கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைபிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள் '(யோவா15:10) தந்தையின் கட்டளைகளைக் கடைபிடித்ததால்தான் அவரது அன்பில் நிலைத்திருந்ததாக இயேசு கூறுகின்றார். தந்தையின் அன்பில் நிலைத்திருந்ததால்தான் தந்தைக்குரிய காரியங்களை அவரால் செய்ய முடிந்தது. காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்(மாற்1:15)என்று முழங்கி நற்செய்தி அறிவிப்புப் பணியை அதாவது இறையரசுப் பணியை அவரால் செய்ய முடிந்தது. தந்தையின் அன்பில் நிலைத்திருந்ததால்தான் எண்ணிலடங்கா வல்ல செயல்களை இயற்கைக்கு அப்பாற்பட்டு அவரால் செய்ய முடிந்தது. மக்களைத் துன்புறுத்திய அலகையின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்க முடிந்தது. அவர் தந்தையின் கட்டளைகளைக் கடைபிடித்து நற்செய்தி அறிவித்தது போல் நாமும் அவரது கட்டளைகளைக் கடைபிடித்தால் அவரது அன்பில் நிலைத்திருக்க முடியும் என்று கூறுகின்றார். அவரது கட்டளைகளைக் கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்து நிற்பவர்களால்தான் உண்மையான நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்ய முடியும்.

'அவருடைய கட்டளைகளை நாம் கடைபிடித்தால் நாம் அவரை அறிந்து கொண்டோம் என்பது உறுதியாகத் தெரியும்'(1யோவா 2:3) கட்டளைகளை கடைபிடித்தால் தான் நாம் தந்தையையும் அவரது மகன் இயேசு கிறிஸ்துவையும் அறிந்து கொண்டவர்களாய் இருப்போம். ஒருவரைப் பற்றி நன்றாக அறிந்து கொண்டால் தான் அவரைப் பற்றி மற்றவர்களிடம் எடுத்துக் கூற முடியும். கடவுளை நாம் அறிந்து அனுபவித்தால் தான் அவரை அறிவிக்க முடியும்.

'கட்டளைகளைப் புறக்கணிப்போர் மனிதரை அல்ல தம்முடைய தூய ஆவியை உங்களுக்கும் அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர்'(1தெச4:8) கட்டளைகளைக் கடைபிடிப்போர் கடவுளின் அன்பில் நிலைத்திருக்கின்றனர். கடவுளை அறிந்திருக்கின்றனர். ஆனால். கட்டளைகளைக் கடைபிடிக்காமல் புறக்கணிக்கிறவர்கள் கடவுளையே புறக்கணிக்கின்றார்களாம். புறக்கணித்தல் என்பது ஒருவரைக் கண்டும் காணாதது போல் செல்வது. அல்லது முக்கியமான குடும்ப நிகழ்வுகள்'அலுவலக நிகழ்வுகளில் அனைவருக்கும் முக்கியத்துவம் கொடுத்துவிட்டு ஒருவரை மட்டும் வேண்டுமென்றே கண்டு கொள்ளாமல் விட்டு விடுவது. இந்தப் புறக்கணிப்பு மனக்காயங்களையும் கசப்பு களையும் கொண்டு வந்து உறவில் விரிசலை உண்டாக்கி நெருக்கத்தைக் குறைத்துவிடும். நாமும் கட்டளைகளைப் புறக்கணித்தோம் என்றால் கடவுளுடைய உறவே வேண்டாம் என்று கடவுளை புறக்கணிக்கறவர்களாகிவிடுவோம். நாம் புறக்கணிக்கின்ற ஒருவரைப் பற்றி எப்படி நம்மால் அறிவிக்க முடியும்?

'அவர் கட்டளைகளைக் கடைபிடிப்பதில்தான் கடவுளின் அன்பு அடங்கியுள்ளது. அவர் கட்டளைகள் நமக்குச் சுமையாய் இருப்பதில்லை (1யோவா 5:4) இயேசு தந்தையின் கட்டளைகளைக் கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்திருந்தார். ஏனெனில், கட்டளைகளைக் கடைபிடிப்பதில் மட்டும்தான் கடவுளின் அன்பு அடங்கியிருக்கிறது. நாம் மேற்கொள்ளும் பக்தி முயற்சிகளின் மூலம் கடவுளிடம் நாம் கொண்டுள்ள அன்பு அடங்கியிருக்கிறதாக தவறாக எண்ணி ஒரு போலியான வாழ்க்கையை வாழ்ந்து விட்டு திருப்தி அடைந்து விடுகின்றோம். உண்மையாகவே கட்டளைகளை கடைபிடித்தோமென்றால் நம்மிடம் உள்ள கடவுளின் அன்பை பிறருக்கும் பகிர்ந்து வாழ்வோம். இயேசுவிடம் இருந்த தந்தையின் அன்பை அவர் பிறரோடு பகிர்ந்து வாழ்ந்தார். வாழும் நற்செய்தியாய் வலம் வந்தார்.

'நீங்கள் அவற்றைப் பின்பற்றி நடங்கள் (கட்டளைகளை) அதுவே மக்களினங்கள் முன்னிலையில் உங்கள் ஞானமும் அறிவாற்றலுமாய் விளங்கும். இந்த நியமங்களைக் கேள்வியுறும் அனைவரும் உண்மையில் இப்பேரினம் ஞானமும் அறிவாற்றலும் கொண்ட மக்களால் ஆனது என்பர் (இச4:6) ஞானமும் அறிவாற்றலும் கொண்டவர்களாக நாம் வாழும்போது நம்மைப் பார்க்கும் பிறரும் இவர்கள் ஞானமும் அறிவாற்றலும் கொண்ட மக்கள் என்று நமக்குச் சான்று பகர்வார்கள். என்னை காண்கிறவன் தந்தையை காண்கிறான் என்று இயேசு ஆண்டவர் சொன்னதைப்போல நம்மை காண்கிறவர்கள் நம்மில் இயேசுவைக் காணும்படி கட்டளைகளைக் கடைபிடித்து வாழ தொடர்ந்து முயற்சி செய்வோம். தூய ஆவியானவர் நமது முயற்சியில் அசைவாடி வெற்றி தருவார்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.



புனிதை ஆகத்தா கொடுங்கோலனும் காமுகனுமாகிய குயின்டசின் ஆசைக்கு இணங்க மறுத்ததால், அவளைச் சிறையில் அடைத்து, பலவாறாக சித்ரவதை செய்து, அவளுடைய மார்புகளை குறடுகளால் சிதைத்து, குற்றுயிராய் போட்டிருந்தான். அப்போது அவள் இருந்த சிறையின் கதவுகளைத் திறந்துகொண்டு பெரியவர் ஒருவர் வந்தார். அவருடைய கையில் கொஞ்சம் மருத்து இருந்தது. அவர் ஆகத்தாவிடம் வந்தது, 'அம்மா! உன்னுடைய உடல் முழுவதும் ஏற்பட்டிருக்கும் காயங்களில் மருத்து தடவி விடுகின்றேன். இதனால் உன்னுடைய காயங்கள் ஆறி, வேதனை தணிந்து விரைவில் நீ குணம் பெறுவாய்' என்றார். ஆகத்தா அவரிடம், 'நான் ஆண்டவருக்காக எத்தகைய பாடுகளையும் மனமுவந்து ஏற்கத் தயார். தயவுசெய்து நீங்கள் என்னுடலில் மருந்து தடவி, நான் ஆண்டவருக்காகப் பாடுகள் படுவதை தடுத்து விடாதீர்கள்' என்றார். அதற்கு அந்த மனிதர் அவரிடம், "அம்மா! நான் வேறு யாருமல்ல இயேசுவின் தலைமைச் சீடராகிய பேதுருதான். என்னை ஆண்டவர் இயேசுதான் இங்கே அனுப்பி வைத்திருக்கிறார். அவர்தான் என்னை உன்னுடைய காயங்களில் மருந்து தடவி விடச் சொல்லி நம்பிக்கையில் இன்னும் திடப்படுத்திவிட்டு வரச் சொன்னார்' என்றார். இதைக் கேட்டு மகிழ்ந்த அகத்தா, பேதுரு தன்னுடைய காயங்களில் மருந்து தடவ அனுமதித்தாள். இதனால் அவள் மறுநாளே உடல் நலம் பெற்று, புதுப்பொழிவு பெற்றாள்.

கிறிஸ்தவ நெறியை பின்பற்றவது என்பது இன்றைக்கு இருப்பது போல் அன்று அவ்வளவு சுலபமல்ல. கிறிஸ்தவம் படிப்படியாக வளர்ந்த அந்த தொடக்க காலகட்டங்களில் கிறிஸ்தவ நெறியைக் கடைப்பிடித்து வாழ்வது என்பது மிகவும் சவாலான காரியம். அத்தகைய சூழலிலும் ஆண்டவர் இயேசுவை தன்னுடைய இறைவனாக, எல்லாமுமாக ஏற்றுக்கொண்டு, அவருக்காகத் தன்னுடைய உயிரைத் தந்தவர்தான் கன்னியும் மறைசாட்சியுமான தூய ஆகத்தா.

ஆகத்தா கி.பி மூன்றாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் (235 -251) பிறந்தவர். இவர் ஓர் உயர்குடியில் பிறந்தவர். அக்காலத்தில் உரோமையை குயின்டஸ் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அவன் உரோமைக் கடவுளை வழிபடுவதை விட்டுவிட்டு, கிறிஸ்துவை வழிபடுகின்றவர்களை எல்லாம் கொடுமையாகச் சித்ரவதை செய்து கொலைசெய்தான். இவனுடைய அச்சுறுத்தலுக்கு எல்லாம் பயப்படாது கிறிஸ்துவின் மீது உறுதியான விசுவாசம் கொண்டு விளங்கியவர்தான் ஆகத்தா

ஆகத்தா கிறிஸ்துவின்மீது உறுதியான நம்பிக்கையோடு இருக்கிறாள் என்ற செய்தி மன்னன் குயின்சுக்குத் தெரிய வந்தது. எனவே, அவன் படைவீரர்களை அனுப்பி ஆகத்தாவை இழுத்து வர உத்தரவின் பேரில் படைவீரர்கள் அவரை மன்னனுக்கு முன்பாக இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தினார்கள். ஆகத்தாவை ஒருகணம் பார்த்த மன்னன அவளுடைய அழகில் மயங்கி, அவளைச் சித்ரவதை செய்ய விரும்பாமல், தன்னுடைய ஆசைக்கு உட்படுத்த நினைத்தான். ஆனால் ஆகத்தாவோ, 'நான் ஆண்டவர் இயேசுவுக்கு என்னையே முழுமையாய் அர்ப்பணித்துவிட்டேன் அதனால் யாருக்கும் என்னைத் தருவதாய் இல்லை' என்று தன் கொள்கையில் உறுதியாய் இருந்தார். இதனால் மன்னன் அவரைச் சிறையில் அடைத்து அவருடைய சதையை பிய்த்து எடுத்து பலவாறாகச் சித்ரவதை செய்தான். இருப்பினும் ஆகத்தா தன்னுடைய நம்பிக்கையில் உறுதியாக இருந்தார். இதனால் கடும் சினமுற்ற மன்னன், அவரை எரியும் தீயில் போட்டான். ஆகத்தா இறக்கும்போது அவருக்கு வெறும் 15வயதுதான். அப்படியிருந்தும் அவர் ஆண்டவர் இயேசுவுக்காகச் செய்த தியாகம் அளப்பெரியது.

புனித ஆகத்தாவின் அர்ப்பண உணர்வை உறுதியான நம்பிக்கையை நமதாக்குவோம். அதன் வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## அன்பின் மொழிகள்



அன்பின் மொழிகள்

கடந்த 70 அத்தியாகங்களில் மனித உறவின் மேன்மை, மனித மனத்தின் தன்மை, உளவியல் தற்பாதுகாப்பு, மன நலம், உணவுசீர் நுண்ணறிவு சுமூகமாக.. நல்ல வலிமையான சமூகமாக உருவெடுக்க உள் உந்துதல் அவசியம் என உணர்ந்து அவற்றில் வளர 10 எளிய வழிமுறைகளை பார்த்தோம். இவற்றையெல்லாம் சிந்தித்த நாம் நல்ல ஆரோக்கியமான வலிமையான சமூகத்தை சுமுகமாக உருவாக்க ஏதோ ஒன்று தேவை என உங்களுக்கு தோன்றுகிறதா? அது ஒரு நேர்மறையான ஓர் உணர்வு. நல்ல சமூகத்தை கட்டி எழுப்ப உதவியாக உள்ள உணர்வு இயேசுவின் வாழ்வில் மையமாக இருந்த அந்த உணர்வு அல்லது வாழ்வியல் மதிப்பீடு எனவும் சொல்லலாம். இப்போது உங்களுக்கு தெரிகிறதா? அந்த உணர்வு கடவுளுக்கு இணையாக சொல்ல கூடிய ஒரே மகத்துவமான உணர்வு. இப்போது கண்டிப்பாக கணித்திரிப்பீர்கள். அது தான் 'அன்பு' அன்பு என்ற உணர்வு. பண்பு, மதிப்பீடு, குணதிசியம் மேன்மையான ஒன்று. அது நல்ல சமூகத்தை கட்டி எழுப்பும். இதை வெறும் வார்த்தையால் சொல்லிவிட்டு போக முடியாது. அன்பு எப்படி நடைமுறையில் சாத்தியமாகிறது என்பதை இந்த அத்தியாத்தில் பார்ப்போம். உளவியல் ஆய்வின்படி அன்பின் மொழியை ஐந்து வகையாக வளர்ப்புமுறை, சூழல் குணாதிசியம் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்து வகையான அன்பின் மொழிகளை பற்றி கேரி மொமான்டே சாப்மேன் என்ற அமரிக்க எழுத்தாளர் புத்தகமாக வெளியிட்டு மிகவும் பிரபுலமானவர். மனித உறவுகள் தொடர்பான இந்த நூல் சுமூகமான வழிகளில் நல்லைதொரு அன்பு சமூகத்தை உருவாக்க வழிவகை செய்கிறது. இதோ அவர் சொல்லும் ஐந்து அன்பின் மொழிகள்

1. வலியுறுத்தி கூறுதல் (words of Affirmation).
2. தரமான நேரம் (Quality Time)
3. பரிசு அல்லது அன்பளிப்பு பொறுதல் (Receiving Gifts).
4. சேவையை உணர்தல் (Acts of Service Service)
5. தொடுதல் (Physical Touch)

இனி ஒவ்வொன்றாக சற்று தெளிவாக சிந்திப்போம்.

### 1. வலியுறுத்தி கூறுதல் (பாராட்டு)

குடும்பத் தலைவனான ராஜா அன்று காலை பரபரப்புடன் வேலைக்கு சென்றபின் தனது மேனேஜரின் அம்மா இறந்ததால் 'இன்று விடுமுறை' என்ற செய்தி ஒரு இன்ப அதிர்வை கொடுத்தது. அவசர அவசரமாக தயார் செய்து கொடுத்து வேலைக்கு சென்ற மனைவி செய்த லெமன் சோற்றையும், நார்த்தங்காய் ஊறுகாயையும் மீண்டும் வீட்டிற்கே எடுத்துச்சென்றான். வீட்டை திறந்து உள்ளே சென்றான். கழுவாத பாத்திரங்கள் சற்று தொந்தரவு செய்ய அவைகளை கழுவி வைத்தான். உள்ளறைக்கு சென்றவனுக்கு அந்த அழுக்கு முட்டைகள் அழுத்தம் கொடுத்ததால், அனைத்தையும் வாஷிங் மீஷினில் போட்டான். பேனை ஆன் செய்தான், தூசி பறந்தது பேனை துடைக்க தரை தூசியானதை பார்த்தவன் தரையை சுத்தம் செய்து முடிக்க, வாஷிங் மெஷின் சத்தம் எழுப்ப துணிகளை காய வைத்தான். சற்று சாயலாம் என படுக்கை

அறைக்கு சென்ற அவனை மடிக்கபடாத போர்வைகள் என்னை கொஞ்சம் கவனி என்று சொல்வது போல் தெரிந்தது. எனவே அவற்றையும் மடித்துவைத்து அந்த அறையையும் சுத்தம் செய்துபின் சற்றே படுக்கையில் சாய்ந்து தூங்கிவிட்டான். மதியம் 1 மணிக்கு விழிப்பு தட்டி எழுந்து, லெமன் சோற்றையும் நார்த்தங்காய் ஊறுகாயையும் சாப்பிட்டு விட்டு மற்ற இடங்களையும் சுத்தம் செய்து கொண்டே மாடிக்கு போய் துணிகளை எடுத்துக்கொண்டு கீழே வந்து அயன் செய்துவிட்டு டீ போட்டு குடிக்கும் போது. தனது மனைவி பிரியா வந்ததும் மகிழ்ச்சியில் சிரித்தான். அவளும் புன்னகையுடன் உள்ளே வந்தாள். தான் எல்லாவற்றையும் சுத்தமாக வைத்திருப்பதை கண்ட பிரியா நிறைய பாராட்ட போகிறாள் என்ற எதிர்பார்ப்போடு 'ஏதாவது மாற்றம் தெரிகிறதா?' என கேட்டபடி வீட்டை காட்டினான் 'ஆம் தெரியுது' என சொன்னபடி உள்ளே சென்றாள். தன்னை பாராட்டவில்லை என்ற ஏக்கமும், வருத்தமும் அவனை சுற்றியது. திடீரென மனச்சாட்சி அவனை மென்மையாக வருடி 'இந்த ஒரு நாள் நீ வேலை செய்து வீட்டை சுத்தம் செய்தமைக்கு அதுவும் உனது விடுமுறை நாளில், இவ்வளவு ஏக்கமும், வருத்தமும் இருக்கு என்றால் உன் மனைவி பிரியாவை நீ இத்தனை ஆண்டுகளில் ஒருநாள் கூட பாராட்டவில்லை, அப்பெடியென்றால் அவள் எத்தனை முறை வருத்தப்பட்டிருப்பாள்' என சொல்லி முடிக்க, அவனுக்கு பாராட்டப்படுவதும் ஒரு அன்பின் வெளிப்பாடு என புரிய வந்தது.

**விவிலியப் பின்னனி:**

1. இயேசுவின் திருமுழுக்கு நேரத்தில் வானக தந்தை இயேசுவை குறித்து பெறுமை கொள்கிறார் (மத் 3:17)

2. இயேசு தன் சீடர்களை 'நீங்களே உலகின் ஒளி.!' என புகழ்கிறார் (மத் 5:14-16)

3. கிணற்றுக்கு வந்த கனானிய பெண்ணிடம் உண்மையை சொன்னதிற்கு வலியுறுத்தி கூறுனார். (யோவா 4:17,18)

**நடைமுறை செயலாக்கம்:**

**அன்பு குறிப்பு :** அன்பான குறிப்புகளை ஒரு தாளில் எழுதி நமது அன்புக்குறியவர்களுக்கு கொடுக்கலாம், அவர்கள் அதை பார்த்து அன்பை உணர வழிவகுக்கலாம்.

**பாராட்டும் வார்த்தைகள் :**

சரியாக படிக்காத தன் மகனின் மற்ற திறன்களை பாராட்டி நல்ல வார்த்தைகள் சொல்லும் தாய், தன் மகனின் முன்னேற்றத்தை காண்பார்கள்.

**குறுஞ்செய்திகள்:**

நமக்கு பிரியமானவர்களுக்கு அன்பான குறுஞ்செய்திகளை அனுப்புவது, அன்பின் பிரதிபலிப்பை எழுத்து வடிவில் பார்ப்பது இவ்வகையான அன்பின் மொழியை கொண்டவர்களுக்கு அதிகம் மகிழ்ச்சியை கொடுக்கும்.

**அசை போட அரை நிமிடம்**

'பாராட்டும், சீராட்டும் அன்புபாதையில் கொண்டு செல்லும்'.

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**

மனநல ஆற்றுபடுத்துநர். பரமக்குடி.

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- கடவுள் ஆவியால் இயக்கப்படுகிறவர்கள கடவுளின் மக்கள் என்பதை உணராமல் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 8:14).

- கிறிஸ்துவின் துன்பங்களில் நாம் பங்கு பெற வேண்டும்; அப்போதுதான் அவரோடு மாட்சியிலும் பங்குபெறுவோம் என்பதை அறிந்தும் துன்ப நேரங்களில் துவண்டு மனத்தளர்ச்சி அடைந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 8:17).

- கடவுள் இரக்கம் கட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது என்பதைத் தெரிந்தருந்தும் வெற்றிகள், வளர்ச்சிகள் என் முயற்சியால் நடந்தன என்று சுய பெருமை கொண்டு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 9-16)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம் மாத செபக் கருத்து**

- குருத்துவ மற்றும் துறவற அழைத்தலுக்கு இளையோரை குடும்பங்கள் ஊக்குவிக்கவும்
- குருத்துவ மற்றும் துறவற வாழ்விற்கு இறையழைத்தல் பெருகவும்.
இளையோர் ஆர்வம் பெறவும்
- அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட கோர காட்டுத்தீயால் பாதிக்கப்பட்டோர் வாழ்வாதாரத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ள
- யூபிலி ஆண்டு கத்தோலிக்க நம்பிக்கையாளர்களிடையே ஆன்மீக எழுச்சியை உருவாக்க
- யூபிலி ஆண்டில் சிவகங்கை மறைமாவட்டத்தில் முன்னெடுக்கும் அருள்வாழ்வுத் திட்டங்கள் மிகுந்த பலன்கொடுக்க
- இந்தியாவில் சனநாயக மற்றும் மதச்சார்பின்னை கோட்பாடுகளும், அரசியல் சாசனமும் அவற்றை வலுப்படுத்தும் நிறுவனங்களும் பாதுகாக்கப்பட
- புதுடெல்லியில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் உண்மையுடனும் நேர்மையுடனும் நடைபெற

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- யூபிலி ஆண்டில் தாழ்ச்சி என்ற இறைப்பண்பில் ஒவ்வொரு நாளும் வளர்தல்
- இறையழைத்தலுக்காகம் தினமும் செபித்தல்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அருள்சான்று நிலையம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை -
அமைதியகம்



புதிய பணியாளர் பயிற்சி
ஆர்.எஸ். மங்களம்

## விண்ணகப்பிறப்பு

இராமேஸ்வரம் வட்டாரத்தைச் சார்ந்த
நற்பணி T. ஹெலன் மேரி அவர்கள் 18.01.2025 அன்று
விண்ணகப் பிறப்படைந்தார்கள்.
அவர்களின் ஆன்மா இறைவனில் என்றும் இளைப்பாறுக!!



படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **பிலிப்பியர் 2-4 அதிகாரங்களுக்குள்**









# வட்டாரத் தியானக் கூட்டங்கள்



ஆர்.எஸ் மங்களம்



இராமேஸ்வம்



புளியால்



தேவகோட்டை



சருகணி



ஆவுடைப் பொய்கை



சாயல்குடி



முத்துப்பேட்டை



மானாமதுரை

**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.)
Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com